www.nie.edu.sg
1 Nanyang Walk Singapore 637616 Tel: (65) 6790 3888
NTU Reg No. 200604393R

பெயர்: நஸிமா பாநு (U1660077D)
மேற்பார்வையாளர்: இணைப் பேராசிரியர் முனைவர் சீதாலட்சுமி
தேசியக் கல்விக் கழகம், நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம்

# சிங்கப்பூரில் தமிழர்களுக்கிடையில் தமிழ்மொழியின் நிலை

## க 1 பின்னணியும் சிக்கலும்

ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு தனித்துவமிக்க அடையாளம் இருக்கின்றது. இந்தத் தனித் தன்மை பெற்ற அடையாளம் சில குறிப்பிட்ட அம்சங்களைக் கொண்டு அமைகின்றது. அதில் மொழியும் அடங்கும் எனச் சொல்லப்படுகின்றது (மலூஃப் & பிரே. Maalouf & Bray, 2012). மொழித் திறமை குறைந்தால் அடையாளத்தை இழந்துவிடுவோம்' எனச் சொல்லப்படுகின்றது (கோபிநாதன், 2014; விஜயராணி மூர்த்தி & க. முருகன், 2016இல்). இதனை நன்கு அறிந்தே சிங்கப்பூரில் தாய்மொழிகளுக்குப் பெருமளவில் முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது.

1980களிலிருந்து 2015 வரை பார்க்கும்போது, தமிழர்களுக்கிடையில் தமிழ்மொழிப் பயன்பாடு குறைந்து வருவதாகத் தெரிகின்றது (குவோ & சான். Kuo & Chan, 2016). சிங்கப்பூரில் தமிழ்மொழியின் நிலை தொடர்பாகப் பல்வேறு ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன (வீரமணி, 1977; கோபிநாதன், 2014). ஆனால், நாட்டில் தமிழ்மொழிப் பயன்பாடு குறைவதற்கான அடிப்படைக் காரணங்கள் தொடர்பாக மேலும் அதிகமாக ஆராயப்பட வேண்டும்.

அவற்றைக் கண்டறிந்தால்தான் அவற்றைக் களைவதற்கான சரியான முயற்சிகளை மேற்கொள்ள முடியும். இது சிங்கப்பூரில் தமிழ்மொழியின் எதிர்காலத்துக்கு மிகவும் இன்றியமையாததாகும்.

## உ 2 ஆய்வு நோக்கமும் வினாக்களும்

எனவே, இந்த ஆய்வு மூன்று நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு அமைந்தது. முதலாவதாகத், தமிழ்மொழியைப் பற்றித் தமிழர்களுக்கு இருக்கின்ற கண்ணோட்டங்களை அறிந்து அவர்கள் அதைத் தங்களின் அடையாளத்தின் ஒரு முக்கிய அம்சமாகக் கருதுகிறார்களா என்பதை இவ்வாய்வு காண விரும்பியது. இரண்டாவதாக, சிங்கப்பூரில் தமிழ்மொழிப் பயன்பாடு குறைவதற்கான அடிப்படைக் காரணங்களை ஆராய்ந்தது. இறுதியாக, அடையாளங் காணப்பட்ட பிரச்சினைகளுக்குத் தகுந்த பரிந்துரைகளை வழங்கி சிங்கையில் தமிழ்மொழியின் நிலையை மேம்படுத்த முயற்சி எடுத்தது.

1. தமிழர்கள் தமிழ்மொழியைத் தங்களது அடையாளத்தின் பெரிய பகுதியாகக் கருதுகிறார்களா?
2. தமிழர்களைப் பொறுத்தவரை சிங்கப்பூரில் தமிழ்மொழிப் பயன்பாடு குறைவதற்கான காரணங்கள் யாவை?
3. சிங்கப்பூரில் தமிழ்மொழியின் பயன்பாட்டை மேம்படுத்தி அதை ஒரு வாழும் மொழியாக்கக் கண்டறியப்பட்ட சவால்கள் எவ்வாறு களையப்படலாம்?

## ங 3 காரண விளக்கமும் கருத்துத் தொடர்பான பணிச்சட்டமும்



## ச 4 ஆய்வு நெறிமுறை

- செயல்முறை ஆய்வு (பதிவு செய்யப்பட்ட நேர்காணல்)
- மூன்று பிரிவினைச் சேர்ந்த 15 பங்கேற்பாளர்கள் (மாணவர்கள், பணி புரிபவர்கள், பெற்றோர்கள்)
- தமிழ்ச் சமுதாயத்தைப் பல வகைகளில் பிரதிநிதிக்கும் 16-35 வயதுக்கு உட்பட்டோர்
- நேர்காணல் கருத்துகள் தரவுகளாகத் திரட்டப்பட்டன
- ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள் தரவுகளை ஆய்வதற்கும் உறுதிப்படுத்துவதற்கும் துணையாகப் பயன்படுத்தப்பட்டன
- சிங்கப்பூரில் தமிழ்மொழிப் பயன்பாடு குறைவதற்கான காரணங்கள் அடையாளம் காணப்பட்டு அவற்றைக் களைவதற்குரிய வழிகள் பரிந்துரைக்கப்பட்டன

## ரு 5 தரவுகளின் பகுப்பாய்வு

- 93% தங்களது தனித்துவமிக்க அடையாளத்தை உருவாக்க தமிழ்மொழி மிகவும் முக்கியம் என்று கூறினர்.
- 93% தமிழ்மொழியின் நிலை முன்பு காட்டிலும் பயன்பாட்டளவில் சற்று மோசமாகிவிட்டதாக உரைத்தனர்.
- அதற்கான காரணங்கள் இல்லம், பள்ளி, தகவல் தொடர்புச் சாதனங்கள் மற்றும் இன்ன பிற எனக் கண்டறியப்பட்டன.
- வீட்டில் தமிழ் பேசுவதில்லை, பள்ளிகளில் தமிழ்மொழி பேச அதிக வாய்ப்புகள் கிடைப்பதில்லை, பிள்ளைகள் சுலபமாகப் படித்துப் புரிந்துகொள்ளக்கூடிய தமிழ்ப் புத்தகங்கள் சிங்கப்பூரில் தாராளமாக இல்லை போன்ற காரணங்கள் முன்வைக்கப்பட்டன.
- உயர்நிலை, தொடக்கக் கல்லூரி மாணவர்களின் தமிழ்ப் பயன்பாடு நண்பர்கள் மத்தியில் அவ்வளவு அதிகம் இல்லை; பல்கலைக்கழகங்களிலும் பயன்பாடு குறைகின்றது.
- வேலை புரிவோருக்குப் பள்ளி வாழ்க்கைக்குப் பின் தமிழ்மொழிப் பயன்பாடு பெருமளவில் குறைகின்றது.
- பெற்றோர்கள் வீடுகளில் பேசும் மொழி எதுவோ அதுவே அவர்களது பயன்பாட்டு மொழியாக அமைந்துள்ளது.
- தமிழர்களின் வீட்டில் அதிகமாகப் பேசப்படுகின்ற மொழியும் அவர்களின் வாழ்வில் தமிழ் பேச முன்மாதிரியாக இருப்பவர்கள் பற்றியும் கீழ்க்காணும் வரைபடங்கள் முறையே விளக்குகின்றன.







## கூ 6 கலந்துரையாடல்

1. தமிழர்களில் பாதிக்குச் சற்று மேற்பட்டவர்கள் தங்களின் அடையாளத்தின் முக்கிய அம்சங்களில் ஒன்றாகத் தமிழைக் கருதுகின்றனர்.

2. தமிழர்களின் தனித்துவமிக்க அடையாளத்தை உருவாக்கத் தமிழ்மொழி முக்கியம் என்று கருதுகின்றனர். தமிழ்மொழியோடு பின்னிப் பிணைந்தவையாகத் தமிழர்களின் பண்பாடு, பாரம்பரியம், பழக்கவழக்கங்கள், நற்குணங்கள் போன்றவை இருக்கின்றன. அவற்றைப் பெறுவதற்குத் தமிழ் உகந்த கருவியாக இருப்பதை உணர்கின்றனர். சுவா (Chua, 1995) கூறியது போல் நமது பாரம்பரியம் நமது மொழியில் அடங்கியுள்ளது. எனவே, தமிழ்மொழியைப் பேசும்போது அதைச் சார்ந்திருக்கும் கலாசாரத்தையும் பண்பாட்டுக் கூறுகளையும் தமிழர்களால் பெற முடிகின்றது.

3. சிங்கப்பூரில் தமிழ்மொழியின் பயன்பாடு குறைந்து வருவதைத் தமிழர்கள் உணர்ந்திருக்கின்றனர். இது குவோ மற்றும் சான் (Kuo & Chan, 2016) இந்தியர்களின் வீடுகளில் 1980களிலிருந்து 2015ஆம் ஆண்டு வரை தமிழ்மொழிப் பயன்பாடு தொடர்பாக எடுத்த கணக்கெடுப்புகளோடு ஒத்திருப்பதைக் காணலாம். அதற்குக் கல்வி, இல்லம் போன்ற பரிமாணங்க ள் காரணமாகக் கூறப்பட்டன. இப்பரிமாணங்களில் தமிழ்மொழியினைப் பராமரிப்பதில் பல இன்னல்களைத் தமிழர்கள் சந்திக்கின்றனர்.

## எ 7 பரிந்துரைகள்

1. வீட்டில் தமிழ் பேச வேண்டும் என்று சொல்வதோடு அதை முனைப்புடன் செயல்படுத்த வேண்டும்.
2. இருமொழிக் கொள்கையினை வலுவாகப் பின்பற்றி வரும் சிங்கப்பூரில், இரண்டு மொழிகளையும் சமமான நிலையில் வைத்துப் பார்ப்பது முக்கியமாகும். 'சிங்கப்பூரில் திடப்பான இருமொழியா ளர்களை உருவாக்குவதில் முதல் மொழியும் இரண்டாம் மொழியும் ஒன்றுக்கொன்று வரங்களாக அமைதல் அவசியம்' என்று சீதாலட்சுமி (2018) கூறியது இதனை மேலும் பறைசாற்றுகின்றது.
3. பெற்றோர்களே அதிகப்படியாக முன்மாதிரிதிரியாக விளங்குகின்றனர். பெற்றோர்கள் வீட்டில் தமிழ் பேசும்போது பிள்ளைகளும் அதனைப் பின்பற்றுவர். அதிலும் பேச்சுத் தமிழில் தொடர்ந்து பேசும்போது எழுத்துத் தமிழுக்கும் பேச்சுத் தமிழுக்கும் இடையே உள்ள வேறுபாட்டினை இன்னும் இலகுவாகப் புரிந்துகொள்வர்.
4. தமிழ் மாணவர்கள் தமிழ்மொழியைப் பாடவேளை யில் மட்டுமல்லாமல் பிற நேரங்களிலும் பயன்படுத்தக்கூடிய வாய்ப்புகளைத் தமிழாசிரியர்கள் அமைத்துத் தர வேண்டும். தமிழாசிரியர்கள் மாணவர்களுக்கு மொழியறிவுடன், மொழி உணர்வினையும் பண்பாட்டு விழுமியங்களையும் ஊட்டத் தொடர்ந்து முயல வேண்டும்.
5. பாலர் பள்ளிகளில் தமிழ் வழங்கப்படுவது தொடர்பான முயற்சிகள் மேலும் தீவிரமாகச் செயல்படுத்தப்பட வேண்டும்.
6. இளம் சிறுவர்களுக்கு ஏதுவான கதைப்புத்தகங்கள் சுலபமா கக் கடைகளிலோ நூலகங்களிலோ கிடைக்கும் வகையில் முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். அழகான வடிவமைப்பில், எளிய கருத்துகளைத் தமிழில் சொல்லும் தமிழ்க் கதைப்புத்தகங்கள் வெளிவர வேண்டும்.
7. தகவல் தொடர்புச் சாதனங்களில் சிறுவர்க ளுக்காகக் கேலிச் சித்திரங்கள், குழந்தைப் பாடல்கள் போன்ற பிரத்தியேகமான நிகழ்ச்சிகள் தமிழில் தயாரிக்கப்பட வேண்டும்.